மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.

முன்னிலை: திரு. பி.ஈஸ்வரமூர்த்தி, பி.எஸ்ஸி., எல்.எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,ஜெயங்கொண்டம்.

2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்: 248 / 2013**

இராஜேந்திரன், த/பெ.பழனியாண்டி, தெற்குபட்டி கிராமம், உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம்.

.. வாதி

/எதிர்/

சின்னப்பையன், த/பெ.வீரன், எண்.5/12, சின்னத்தாபுரம் வடக்கு ரோடு, சின்னத்தாபுரம் மதுரா, அரவக்குறிச்சி வட்டம், கரூர் மாவட்டம்.

.. பிரதிவாதி

WEB COPY

வாதியிடம் பிரதிவாதி கடனாக அசல் ரூ.70,000/- பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/- க்கு ரூ.1% வட்டியுடன் திருப்பிக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு 10.07.2011ஆம் தேதி எழுதிக் கொடுத்த கடனுறுதிச் சீட்டின் பேரில் வட்டி சேர்த்து கொடுபட வேண்டிய தாவாத் தொகை ரூ.84,525/-யை பின் வட்டி மற்றும் செலவுத் தொகையை வசூலிக்க வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்குரை நாள் | - | 30.10.2013 |
| வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் | - | 10.07.2011 |
| இடம் | - | மருதூர் தெற்குபட்டி கிராமம்,<br>உடையார்பாளையம் தாலுக்கா,<br>அரியலூர் மாவட்டம். |

நீதிமன்ற முத்திரைக் கட்டணத்திற்கும், அதிகார வரம்பிற்கும் தாவா பொறுமானம் ரூ. 84,525/- இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 22-ன் படி நீதிமன்ற முத்திரைக் கட்டணமாக ரூ.6,340/- செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சண்முகநாதன் அவர்கள் முன்னிலையாகியும் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் எவரும் ஆஜராகாமல் வாதியை அழைத்தும் வருகை தராமலும் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்பாணை</u>

வாதியின் தவறுகை காரணமாக இவ்வழக்கு பிரதிவாதியின் செலவுத் தொகை இல்லாமல் தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

பிரதிவாதியின் செலவுத் தொகை ரூ.155/-என கணக்கிடப்படுகிறது.

<u>செலவுத் தொகை விபரம்</u>.

| | | |
|---|---|---|
| | | ரூ. |
| நீதிமன்றத் கட்டணம் | : | -- |
| வக்காலத்து | : | 5.00 |
| அழைப்பானை செலவு | : | -- |
| வழக்கு முன்னறிவிப்பு செலவு | : | -- |
| எதிர் வழக்குரை தயாரிப்பு செலவு | : | 150.00 |
| வழக்கிறஞர் கட்டணம் | : | -- |
| கூடுதல் | : | **155.00** |

**<u>சொத்து விபரம்</u>**

இல்லை

2013ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாள் என்னால் இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்) திரு. பி.ஈஸ்வரமூர்த்தி, பி.எஸ்ஸி., எல்.எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

WEB COPY